# பூகோளக் கிராமமாகும் அரசு

த. கிருஷ்ணமோகன்
முதுநிலை விரிவுரையாளர்,சமூக விஞ்ஞானங்கள்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை
செங்கலடி

ஆய்வுச் சுருக்கம்
உலகிலுள்ள பல பிராந்தியங்கள், அரசுகளில் வாழும் மக்களுக்கிடையில் தொடர்புகளையும், தங்கியிருத்தலையும் பூகோளமயமாதல் ஏற்படுத்தியுள்ளது. பூகோளமயமாதல் உலகத்தினைச் சிறிய கிரகமாக (World Planet) அல்லது பூகோளக் (Global Village) கிராமமாக மாற்றியுள்ளது. உலக அரசாங்கம் ஒன்றைத் தாபிப்பதற்கான முன்னோக்கிய பாய்ச்சலாக இது கருதப்படுகின்றது. உலக அரசாங்கத்தினை தாபிப்பது தொடர்பாக பெரும் தத்துவஞானிகளாகிய ரூசோ, கான்ற், கிறீன் போன்றவர்கள் கனவு கண்டுள்ளார்கள். முதலாளித்துவ நாடுகளின் மூலதன நீரோட்டம், புதிய தொழில் நுட்பம் உலகத்திலுள்ள பின் தங்கிய பிராந்தியங்களின் அபிவிருத்திக்குத் தலைமை தாங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் என்ன நடைபெறுகின்றது என்பதை இணையங்கள் உடனடியாக வெளியிடுகின்றன. அனேக நாடுகள் ஜனநாயக முறைமையின் தொழிற்பாட்டினைக் கற்கின்றன என்ற செய்தியையும், ஜனநாயகமயவாக்கத்திற்குள் வருகின்றன என்ற செய்தியையும் இது தருகின்றது. சமத்துவத்துடனான சுதந்திரத்தினை உலக மக்கள் அனைவரும் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பினையும் இது வழங்குகின்றது. மேலும் வறுமை, வேலையின்மை, கல்வியறிவின்மை, நோய்கள், பட்டினி போன்றவற்றினை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளைச் சிவில் சமூகம் மேற்கொண்டு வருகின்றது. இதனால் பூகோளளவில் சிந்தித்து தேசியளவில் செயற்படுதல் (Think Globally, Act Nationally) என்ற கோசம் முதன்மை பெற்று வருகின்றது. பூகோளமும் உள்;ரும் இணைந்து 'Glocal' என்றாகிவிட்டது (Global + Local = Glocal) பிரான்சிய எழுத்தாளர்களாகிய Sonnatag, Arenas ஆகிய இருவரும் இதனை கலப்புப்பண்பாதல் (Hybridization) என அழைக்கின்றனர். எனவே பூகோளமயமாதல் தேசிய அரச முறைமையின் இயல்புகளில் செல்வாக்குச் செலுத்தி பூகோள அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான முன் நிபந்தனைகளை உருவாக்குகின்றது. இவ்வகையில் தேசிய அரச முறைமைகளின் செயற்பாடுகளில் பூகோளமயமாதல் செலுத்தும் செல்வாக்கினால் ''சமூகத்தில் தனியதிகாரமுடையது அரசு'' என்ற கோட்பாடும்,''இறைமை பற்றிய ஒருமைவாதக் கோட்பாடும்''(Monistic) மீள் விவாதத்திற்குரியதாகியுள்ளது.

பிரதான சொற்கள்:பூகோளமயமாதல்,பூகோளக்கிராமம்,எல்லை கடந்த அரசு, தகவல் தொழிநுட்பம்,பல்தேசியக்கம்பனிகள்.

## 1. அறிமுகம்

இறைமை, பிரதேச எல்லை, அரசபண்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசமுறையினை வெஸ்ற்பாலியா உடன்படிக்கை உருவாக்கியது. இதன்மூலம் பூகோளம் சிறிய சிறிய அரசுகளாக எல்லையிடப்பட்டதுடன், ஒவ்வொரு அரசுகளும் தனித்தனி அரசாங்கத்தினால் ஆட்சிசெய்யப்படும் அரசியல் கலாசாரம் ஆரம்பமாகியது. வெஸ்பாலியா உடன்படிக்கை மூலம் உருவாக்கப்பட்ட அரசு ஒவ்வொன்றும் விசாலமானதும், உயர்வானதும் உள், வெளி கட்டுப்பாடுகள் எதுவுமில்லாத இறைமையினைக் கொண்டிருந்தன. இறைமை, அடிப்படையில் இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. ஒன்று உள் இறைமை மற்றையது வெளி இறைமை ஆகும். அரசாங்கம் தனது முழு நிறை அதிகாரத்தினை தனது எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் மீது பிரயோகிப்பது உள் இறைமையாகும். வெளி இறைமை என்பது அரசிற்கு மேலானதும், அரசின் எல்லைக்கப்பால் இருந்து அதிகாரத்தினைச் செலுத்தக்கூடிய பிறிதொரு சக்தி இல்லாத காட்சியாகும். இன்னோர் வகையில் கூறின் அரசிற்கு வெளியிலிருந்து எவ்வித அழுத்தங்களோ அல்லது கட்டுப்பாடுகளோ செலுத்தப்படாத அரசியல் காட்சிநிலையாகும். பூகோளமயமாதல்,அரசு பற்றிய ஆய்வுகளின் மையமாக இறைமை என்ற எண்ணக்கருவுள்ளது. அரசு தனது கொள்கைகள், வழிநடத்தல்களைக் கொண்டிருக்கும் உயர்ந்த நிறுவனமாகும். இறைமை தொடர்பான மரபுசார்ந்த வியாக்கியானங்களும், பூகோளரீதியாக ஒன்றிணைக்கப்பட்ட பொருளாதாரமும் அரசின் தனியுடைமை மீது செலுத்தும் செல்வாக்கு ஆய்வுசெய்யப்பட வேண்டும். எனவே அரசு என்ற பதம் பாவனையில் இல்லாததொரு சர்வதேச சூழல் பூகோளமயமாதல் மூலம் உருவாகி வருகின்றதா? பூகோளமயமாதல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியன ஒன்றிணைந்து இறைமை பற்றிய ஒருமைவாதக் கோட்பாட்டினை (Monistic) சவாலுக்குட்படுத்துகின்றதா? என்ற மையவினாக்களுக்கு விடைதேடவேண்டியுள்ளது.பூகோளமயமாதல் பற்றிய விவாதம் மிகவும் ஆழமானதும், எல்லைப்

படுத்தப்படமுடியாததுமாகும். ஆயினும் அரசு-பிரதேசஎல்லை- இறைமை ஆகியவற்றிற்கிடையில் இருக்கக் கூடிய நீடிப்பு, மாற்றம் அரசாங்க ஒழுங்குபடுத்தல், அரசுகளின் உறவில் ஏற்படும் மாற்றங்கள், அரசுகளின் திறன், கொள்கை என்பன பூகோளமயமாக்கத்தினால் மாற்றமடைந்துள்ளதா?அரசுகள் பூகோளமயமாதலினால் பலமாக இருக்கின்றவா? அல்லது பலவீனமடைந்து விட்டனவா?என்ற நோக்கில் இக்கட்டுரை ஆய்வு செய்யகின்றது.இவ் ஆய்விற்குத் தேவையான இரண்டாம் நிலைத் தரவுகள் அனைத்தும் நூலகத்திலிருந்தும், இணையத்தளங்களில் பதிவிறக்கம் செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டன. இக்கட்டுரைக்கு பண்புவகைசார்ந்த (Qualitative research) அணுகுமுறையும் அதனுடன் இணைந்த உய்தறிமுறையும் (Deductive Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் வெஸ்பாலியா முறைமையினால் உருவாக்கப்பட்ட அரச முறைமையில் காணப்படும் இறைமையின் நிலை, பூகோளமயமாதல் பற்றிய வரைவிலக்கணங்கள், விளக்கங்கள், அரச முறைமை பூகோளமயமாக்கம் உருவாக்கியுள்ள பொருளாதார, அரசியல், சமூக ஒழுங்கினால் சந்திக்கும் சவால்கள், அரசிற்கு இருக்கக்கூடிய தொடர்ச்சியான பலம், அரசிற்கு எதிராக எழக்கூடிய எதிர்க்கருத்துக்கள், பூகோளமயமாக்கம் இறைமையினை மட்டுப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகள் , பூகோளமயமாக்க சகாப்தத்தில் அரசமுறை தொடர்ந்தும் நீடித்து நிலைத்திருக்கும் பண்பு என்பன ஆய்வு செய்யப்படுகிறது.

## 2. பூகோளமயமாக்கத்தின் தோற்றம்

பூகோளமயமாக்கம் என்ற எண்ணக்கரு கல்வித் துறைக்கான புதிய வரவு என்ற மனப்பதிவு தவறானதாகும். புராதன காலங்களில் சமயம், கலாசாரம் என்பவைகளைப் பரப்புவதற்கும், தமது பொருட்களை விற்பனை செய்வதற்கும் மக்கள் இடத்திற்கு இடம் நகர்ந்து சென்றார்கள். இதனால் இந்தியப் பொருட்கள் பிரித்தானியாவிலும், பிரித்தானியப் பொருட்கள் இந்தியாவிலும் விற்கப்பட்டன. அராபியர்களும், சீனர்களும் கீழைத்தேச நாடுகளுக்கு சென்று தமது பொருட்களை விற்பனை செய்ததுடன் தமது சித்தாந்தங்களையும் பரப்பினர். தமது கலைகள், சிற்பங்களை இடத்திற்கு இடம் கொண்டு சென்று காட்சிப்படுத்தினர். இச் செயல்முறையூடாக உலக மக்களுக்கிடையில் பரஸ்பர உறவு ஏற்பட்டு ஒருவரை ஒருவர் அறிந்து, புரிந்து வாழப்பழகிக் கொண்டனர். இன்று இதே செயல்முறை விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் மிக வேகமாகவும், விரைவாகவும் வளர்ந்து வருகின்றது (Deepak Nayyar, 1999:3).

பூகோளமயமாதல் எப்போது தோற்றம் பெற்றது என்பது தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 1983ஆம் ஆண்டு தியோடோர் லெவிட் (Theodore Levit) ஹாவாட் பிஸ்னஸ் றிவியு (Harvard Business Review) சஞ்சிகையில் சந்தைப் பூகோளமயமாக்கல் (TheGlobalization of Market) எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் ஒரேவகையான உற்பத்திகள், சேவைகளை அடிப்படையாகக் கொண்ட பூகோளசந்தை உருவாகிவிட்டது. எல்லாஇடத்திலும் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளக்கூடிய உலகம் உருவாகிவிட்டது எனக் கூறுகின்றார். இதற்கு கொக்கோ கோலா, பெப்சி, மக்டொனால்ட் போன்ற நிறுவனங்களின் பூகோளச் சந்தை செயற்பாடுகளை லெவிட் உதாரணங்களாகக் காட்டுகின்றார் (Dumitrescu Luigi and Vinerean Simona:147).ஆனாலும்,உண்மையில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்னரே புதிய வேகத்தோடு இது உலகைச் சுற்ற ஆரம்பித்தது எனக் கூறலாம். ஆயினும் 1970 மற்றும் 1980 களில் முதலாளித்துவ நாடுகளின் கைத்தொழில்துறை வீழ்ச்சியடைந்ததுடன், முதலீடுகளுக்கான இலாபகரமான வாய்ப்புகளும் வீழ்ச்சியடைந்தன (Group of Experts on the United Nations Programme in Public Administration and Finance, 2000: 1).இதனால் சர்வதேச அளவில் முதலீடு செய்து இலாபம் பெறுவதில் முதலாளித்துவ நாடுகள் பிரச்சினைகளை எதிர்நோக்கின. இந்நிலையில் சோவியத் யூனியனின் உள்நாட்டு பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியையும், அதனால் ஏற்பட்ட கம்யூனிச அரசின் வீழ்ச்சியையும் பயன்படுத்தி பூகோளப் பொருளாதார மேலாதிக்கத்தை முதலாளித்துவ நாடுகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தன. சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் கம்யூனிச நாடுகளின் சோசலிச பொருளாதார கோட்பாட்டின் ஆதிக்கம் பூகோளளவில் வீழ்ச்சியை சந்தித்தது (Ali Farazmand and Jack Pinkowski,2007:41).பூகோளச்சந்தை எனும் கோட்பாட்டின் அடிப்படையில் உலக நாடுகள் அனைத்தும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் செயற்பட்டு மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தத் தொடங்கின. எந்தவொரு நாடும் தமது பொருளாதாரத்தினை பூகோள நாடுகளின் உதவியின்றி தனித்து சுயமாக நிர்ணயித்து விட முடியாத நிலை தோன்றியது. இதற்கு விஞ்ஞானத்தொழில்நுட்ப வளர்ச்சி, கணனிமயமான செய்தித் தொழில்நுட்ப வலைப்பின்னல் என்பன மேலும் ஊக்கமளித்தன (Ali Farazmand and Jack Pinkowski,2007:41). எனவே இந்நிலையில் பூகோளமயமாதல் என்றால் என்ன என்பதற்கான விளக்கம் தேவையாகின்றது.

3. பூகோளமயவாக்கம் என்றால் என்ன?

பூகோளமயமாக்கல் என்பது தொலைவில் இருக்கும் இடங்களை ஒன்றிணைக்கின்ற பல மைல்களுக்கப்பால் நிகழும் சம்பவங்களை உள்ளூர் நிகழ்வுகளாக காட்சிப்படுத்துகின்ற உலக அளவிலான சமூக உறவுகளின் தீவிரப்படுத்தலாகும்(Giddens Anthony,1990: 64).உலகினை அழுத்திச் சுருக்குதல்,உலகம் பற்றிய அறிவினை தீவிரப்படுத்துதல் ஆகிய இரண்டையும் முழுமையாகக் குறிப்பிடும் ஒரு கருத்தாகவும் பூகோளமயமாதல் நோக்கப்படுகிறது(Robertson Roland,1992:8). மேலும், பழைய பூகோளமயமாதல் மெலிந்ததாகவும், பரந்ததாகவும் (Thin and Extensive) இருக்க புதிய பூகோளமயமாதல் அடர்த்தியாகவும், முனைப்பானதாகவும் (Thick and Intensive) இருக்கின்றது (Keohane O. Robert and Nye Joseph S. Jr,2000: 108). பூகோளமயமாதல் வர்த்தகம், நிதி, தகவல் என்பவைகளை ஒருங்கிணைத்து தனியான பூகோள சந்தையினையும், கலாசாரத்தினையும் உருவாக்குவதுடன்,(Frriedman Thomas,1999:7-8)உலகம் முழுவதும் வளர்ந்துவரும் பொருளாதார மற்றும் சமுதாய ஒழுங்கமைப்பினைத் தீர்மானிக்கின்றது. பூகோளமயமாக்கம் தொடர்பாக கூறப்படும் கருத்துக்கள் குறிப்பிட்டதொரு விடயத்தினை முதன்மைப்படுத்துவதை அவதானிக்கலாம். சிலர் பொருளாதாரச் செயன்முறைகளே பூகோளமயமாக்கத்தின் மையப் பொருள் எனக் கூறுகின்றனர். வேறுசிலர் அரசியல், பொருளாதார, கருத்தியல் கூறுகளை முதன்மைப்படுத்துகின்றனர். இன்னும் சிலர் சுற்றுச் சூழல் இயல்புகளே பூகோளமயமாக்கத்தின் சாரம்சம் எனக் கூறுகின்றனர்.எனவே அரசுகளுக்கிடையிலுள்ள பௌதீக எல்லைகளைத் தாண்டி உணர்ச்சி பூர்வமான அரசியல், சமூக, பொருளாதார உறவுகளை ஒருமைப்படுத்துவதே பூகோளமயமாக்கம் என விளக்கமளிக்கலாம்.

மூலதனம் எங்கு அதிகமாக குவிந்து கிடக்கின்றதோ அங்கிருந்து அதைப் பெற்று, மனித வளம் எங்கு அதிகமாகவும், மலிவாகவும் இருக்கின்றதோ அங்கு உற்பத்தி செய்து, எங்கு பொருட்களுக்குச் சந்தை அதிகமாக இருக்கின்றதோ அங்கு விற்பனை செய்வதன் மூலம் பூகோளமயமாதல் தன்னை நிலைப்படுத்திக் கொள்கின்றது (Mark Blacksell,2006:185). பூகோளமயமாக்கம் பொருளாதார, அரசியல், கலாசார, சுற்றுச்சூழல், சர்வதேசத் தொடர்புகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்களால் அரசுகளின் எல்லைக் கோடுகளை கருத்தற்றதாக்கி, சமூகங்களுக்கிடையில் அதிகரித்து வரும் தொடர்பினையும், அதனால் ஏற்பட்டு வரும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலையையும் குறிக்கின்றது (Khi V.Thai Dianne Rahm and Jerrell D. Coggburn, 2007:21).இது உலக வரலாற்றில் ஏற்பட்டுவந்த தொடர் நிகழ்வின் பிறிதொருவடிவமாகும்.

சர்வதேச வர்த்தக மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் உலக மக்களுக்கும், அரசாங்கங்களுக்கும் இடையில் தொடர்புகள் மற்றும் ஒருங்கிணைப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் உலகமக்களுக்கும், நிறுவனங்களிற்கிடையில் தொடர்புகள், தங்கியிருத்தல், ஒருங்கிணைப்பு போன்றவற்றை ஏற்படுத்தி பொருளாதார, சமூக, பண்பாடு , தொழில்நுட்ப, மற்றும் அரசியல் விடயங்களில் பூகோளமயமாதல் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது (December Green and Laura Luehrmann, 2010:117-118).தொழில் நுட்பத்தின் வளர்ச்சி ஆழமான சமூக, பொருளாதார, அரசியல் மாற்றத்திற்குள் உலகினைக் கொண்டு வந்தது. பொருளாதார செயற்பாட்டின் மையம், பொருளாதார போட்டியின் இயல்பு, உற்பத்திப் பண்புகளின் இயல்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக கணனியின் வருகையும், பூகோள தொடர்பாடல் முறைமையும் தொடர்பாடலில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர்பாடல் புரட்சியும், தொழில் நுட்ப வளர்ச்சியும் கடந்த தசாப்தங்களில் உலகினை ஒரே வலைப்பின்னலுக்குள் கொண்டுவந்தள்ளது. இதனைப் பயன்படுத்தி முதலாளித்துவ உற்பத்தி முறையினை தமது ஏகபோக மூலதனத்தின் மூலம் மேலும் விரிவுபடுத்திக் கொள்வதற்கான ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலினை முதலாளித்துவ நாடுகள் உருவாக்கியுள்ளது. இதற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினை முலாளித்துவ நாடுகள் பயன்படுத்தி வருகின்றன. இதன்மூலம் பூகோளஅரசுகளின் சுயாதிபத்தியம்,தன்னாதிக்கம் இழக்கப்படுவதாக விமர்சிக்கப்படுகிறது. எனவே அரசுகளின் வீரியத்தில் ஏற்பட்ட மாற்றம் ஆய்வு செய்யப்படவேண்டியதாகின்றது.

4. அரசுகளின் வீரியம் குறைதல்

வெஸ்பாலியா (Westphalia System - 1648) ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்து வரலாற்றின் நீண்ட காலமாக தேசிய எல்லைக் கோடுகள் வரையப்பட்ட தேசிய அரச முறைமை நடைமுறையிலுள்ளது (Kelly Gordon, 2008:3-5).தேசிய அரச முறைமையினையும், இறைமையினையும் உலகில் தோற்றிவித்திருந்த வெஸ்ற்பாலியா உடன்படிக்கைக்கு பூகோளமயவாக்கம் ஆபத்தினை ஏற்படுத்தி விடுமா? என்றதொரு அச்சம் ஏற்பட்டுள்ளது. ஹெகல், ஒஸ்ரின், ஹொப்ஸ் போன்ற அறிஞர்கள் அரசிற்கு கொடுக்கும்

விளக்கங்களில் அரசுகள் இறைமையுடன் தொடர்புடையன என்ற கருத்தினை வலியுறுத்துகின்றனர். இறைமை என்ற மூலக்கூறு ஒவ்வொரு தேசிய அரசுகளினதும் தனியுடமையினை வெளிப்படுத்தி நிற்பதாக இவர்களால் விளக்கமளிக்கப்படுகின்றது. அரசின் பரிணாம வளர்ச்சியில் ஐக்கிய அமெரிக்காவிலும், பிரான்சிலும் நிகழ்ந்த புரட்சிகள் சுதந்திரம், சமத்துவம்,உரிமை போன்றவற்றை ஒன்றாக இணைத்து மக்கள் இறைமையினை வழங்கியிருந்தன. இதன் பின்னர் மனிதனின் சமூகப் பொருளாதார வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் சுதந்திரம், சமத்துவம்,உரிமை என்பன இரண்டறக் கலந்துவிட்டது. ஜனநாயக முறைமையினையும்,நல்லாட்சியினையும் உருவாக்குவதற்கு இவ் எண்ணக்கருக்கள் தேவைப்பட்டதுடன், சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் விவகாரங்களில் மக்களை பங்குபற்றவைப்பதனூடாக நல்லாட்சியை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.வளர்ச்சியடைந்த தகவல் தொழில்நுட்ப அறிவினால் அரசுகளின் வெளி இறைமை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிவில் சமூகங்களின் செயற்பாட்டினால் நலன் பேணும் அரசு என்பது குறைந்தபட்ச அரசாக மாறியுள்ளது. தகவல் தொழில் நுட்ப வலைப்பின்னல் மற்றும் தொலைக்காட்சி வலைப்பின்னல் என்பவைகளால் அரசுகளின் பௌதீக எல்லை வலுவிழந்து வருகிறது. தேசங்களின் சுயாட்சியுரிமை, கட்டாயப்படுத்தும் மனப்பாங்கு என்பவைகளால் ஏற்பட்ட மோதல், வன்முறை என்பன நிறுத்தப்பட்டு சமாதான உலக ஒழுங்கை நோக்கி உலகம் பயணிப்பதற்கு அரசியல் பூகோளமயமாதல் உதவுகின்றது. இன்னோர் வகையில் கூறின் பூகோளமயமாதல் தூரமற்றதும், எல்லையற்றதுமான சமூக உறவுகளை உருவாக்கி வருகின்றது. வாழ்க்கையில் தாம் வாழும் அரசினை தமது பிறப்பிடமாக கருதி வாழ்ந்த பண்பு மாறி உலகத்தினை தமது வாழ்விடமாக கருதி வாழும் பண்பு உருவாகியுள்ளது. மக்கள் பரஸ்பரம் ஒருவருடன் ஒருவர் நட்பினைப் பேணும் வகையில் பூகோளத்தினை ஒரு தனி அரசாக ஒழுங்கமைத்து அதற்குள் எண்ணற்ற, சிக்கலான பல விடயங்களைக் கொண்ட சமூக உறவினைப் பேண வேண்டியுள்ளது. இதனால் அரசுகள் பன்மைத்தன்மையினை அடைந்து தாம் பேணிவந்த தமது தனித்துவம், சுயாதிபத்தியம்,தன்னாதிக்கம் என்பவற்றை இழந்துவருகின்றன (Ali Farazmand and Jack Pinkowski,2007:54 -55).

உலகம் தனியொரு அரசு என்ற சிந்தனை வளர்ந்து வருகிறது. தொடர்பு சாதனங்கள் தொழில் நுட்பங்கள் போன்றவற்றில் ஏற்பட்டு வரும் மாற்றங்களால் காலம், இடம், என்பவற்றில் காணப்பட்ட இடைவெளிகள் அல்லது தூரங்கள் முக்கியமிழந்துவிட்டன. உலகில் ஒரு மூலையில் நடைபெறும் ஒரு நிகழ்வு முழு உலகத்தையும் சில கணப்பொழுதில் சென்றடைந்து, ஏதோ ஒரு வகையில் உலகத்தினைப் பாதிக்கின்றது. பூகோள அரசமுறைமையில் தொடர்புசாதனமும் தொழில்நுட்பமும் தனக்கான பொருத்தப்பாட்டினை உருவாக்கியுள்ளது. உலக மக்களுக்கிடையில் இறுக்கமான சமூக வலைத்தள தொடர்பினை ஏற்படுத்தி உள்நாட்டு அரசியலுக்கும், சர்வதேச உறவுகளுக்குமிடையில் இருந்து வந்த தனித்துவம் அழிக்கப்படுகின்றன (Leonid E. Grinin:214). பூகோள பலத்தின் தன்மையினைப் பொறுத்து அரசு ஒன்றின் உள்நாட்டு அரசியல் விடயங்கள் தீர்மானிக்கப்படுவதுடன், அதன் உள்நாட்டு விடயங்கள், நிகழ்வுகள் சர்வதேசமயப்படுத்தப்படுகின்றன. எனவே உள்நாட்டு மட்டத்தில் நிகழ்கின்ற சிறிய விடயங்கள் கூட, ஆழமாகவும், அகலமாகவும் சர்வதேச மயப்படுத்தப்பட்டு விடுகின்ற நிகழ்வினை இணையங்களும், சமூகவலைத் தளங்களும் செய்து வருகின்றன.பூகோளமயமாதல் அரசுகளின் செயற்பாடுகளில் பல ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. உலக மக்கள் அனைவரும் ஒரேவகையான உணவினை உண்பதற்கும் ஒரே வகையான திரைப்படங்களைப் பார்ப்பதற்கும், ஒரேவகையான விளையாட்டுக்களை விளையாடுவதற்கும் பழக்கப்பட்டு வருகிறார்கள். இன்னோர்வகையில் கூறின் அமெரிக்க ஆடைகளை அணியவும்,சீன உணவுகளை உண்ணவும், பிரான்ஸ்நாட்டு விஸ்கியை குடிக்கவும், ஆங்கில பொப்பிசையை கேட்கவும் பழக்கப்பட்டு வருகிறார்கள். பூகோளமயவாக்கத்தினால் அரசு ஒன்றின் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உள்ளூர்சந்தையில் விற்பனை செய்யமுடியாத நிலை தோன்றியுள்ளது. எனவே பூகோளமயவாக்கத்தின் தாக்கத்தினால் அரசுகளின் வீரியம் படிப்படியாக குறைவடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இதற்கு பல்தேசியக் கம்பனிகள், சிவில் சமூகம், மனித உரிமை மீறல் செயற்பாடுகள், எல்லை கடந்த அரசுகளின் உருவாக்கம் போன்றன துணையாகவுள்ளதால் இவைகள் தொடர்பாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

**i.** பல்தேசியக் கம்பனிகள்

முதலாளித்துவ நாடுகளிற்குச் சொந்தமான பல்தேசியக் கம்பனிகள் வறியநாடுகளில் முதலீடு செய்யும் பொருளாதார கலாசாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேநேரம் வறியநாடுகளைச் சேர்ந்த மக்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் குடியேறும் கலாசாரமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (December Green and Laura Luehrmann, 2010:118).உலக வங்கி, சர்வதேச நாணய

நிதியம், உலகவர்த்தக நிறுவனங்கள் போன்ற அமைப்புக்கள் வழங்கும் நிதியுதவிகளை பெற்றுக்கொள்வதற்கு இந்நிறுவனங்கள் வழங்கும் ஆலோசனைகளையும், நெறிப்படுத்தல்களையும் வறிய அரசுகள் பின்பற்றுமாறு நிர்பந்திக்கப்படுகின்றன. இதனால் அரசுகள் மீயுயர் அதிகாரமாகப் பயன்படுத்தும் இறைமை இந்நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்பட்டு இறைமை என்ற எண்ணக்கரு பரந்தளவில் அழிவுற்று வருகின்றது. இதனை இறைமையின் சட்டரீதியான அழிவு அல்லது கொள்கை வழிநடத்தல்களுக்கான கட்டுப்பாடு என நியாயம் கூறமுடியாது (Ali Farazmand and Jack Pinkowski,2007:75-76). இவ்வகையில் பல்தேசிக்கம்பனிகள் அரசுகளின் சுயாதிபத்தியம், தன்னாதிக்கம், தனித்துவம் என்பவற்றை பின்வரும் வழிகளில் சிதைக்கின்றன.

1. அரசுகள் பல்தேசியக்கம்பனிகளுடன் ஒப்பந்த ரீதியான நிர்வாக ஒழுங்குமுறைகளை உருவாக்குகின்றன. இதன் மூலம் பல்தேசியக் கம்பனிகளின் மூலதனமும், உற்பத்திகளும் உலகம் முழுவதும் செறிவாக்கப்படுகின்றன. எங்கு உற்பத்தியை மேற்கொள்வது? பொருட்களையும் சேவைகளையும் எங்கு விற்பனை செய்வது? என்பதை பல்தேசியக்கம்பனிகள் தீர்மானித்து அதற்கேற்ற வகையில் அரசுகளின் தேசிய எல்லைகளை மீறி இணையங்களின் மூலம் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன.

2. பல்தேசியக் கம்பனிகள் தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்கான கம்பனிகளை பூகோளளவில் நிறுவி அவைகளை சர்வதேசளவில் ஒருங்கிணைத்துள்ளன. இதன்மூலம் பூகோளரீதியான கைத்தொழிற்சாலைகள் (Global Factories) உருவாககப்பட்டுள்ளன. பல்தேசிய கம்பனிகள் தமது தொழில்முயற்சிக்காக அரசுகளின் தீர்மானம் எடுக்கும் செயல்முறையிலும் பங்கெடுக்கின்றன. பல்தேசியக் கம்பனிகள் அரச கொள்கை வகுப்பாளர்கள், திட்டமிடலாளர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதோடு, இவர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்றன. மக்கள் இறைமைக் தத்துவத்தை வலுவிழக்கச் செய்யும் பொறிமுறையாக இது இறுதியில் மாறிவிடுகின்றது.

எனவே பல்தேசிக் கம்பனிகளின் பலதரப்பு பொருளாதார உடன்படிக்கைகளினால் அரசுகளின் செயற்பாடு விழ்ச்சியடைந்து தேசிய பொருளாதார கொள்கையினை வகுப்பதற்கான விருப்பத் தெரிவாக பூகோள போட்டிச் சந்தையினை உலக நாடுகள் தெரிவு செய்கின்றன. பூகோளமயவாக்க யுகத்தில் எந்தவொரு அரசும் பூரண இறைமையுடன் செயற்பட முடியாதுள்ளது. ஏதோவொரு வகையில் ஒரு அரசு பிறிதொரு அரசுடன் இணைந்து செயற்படுவதோடு தங்கியிருக்கவும் வேண்டியுள்ளது. இதனால் இறைமையின் ஒருமுகத் தன்மை வலியுறுத்துகின்ற பாரதீனப்படுத்தப்பட முடியாதது, நிரந்தரமானது, முழுநிறைவானது போன்ற பண்புகள் சிதைவடைந்து விடுகின்றன (Daði Arnar Sigmarsson,2008:214).

**ii.** சிவில் சமூகங்கள்

சிவில் சமூகங்கள் சிறப்பான வளங்களையும், வல்லுனர்களையும் உள்வாங்கி பூகோள சமூகப் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அறிவினை வெளிப்படுத்தி அரசமுறைமைக்குள் நின்று தமது செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றன. இதனால் தேசிய அரசுகள் தமது நலன்புரிச் செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கி அவற்றை சிவில் சமூகத்திடம் ஒப்படைத்து விடுகின்றன. மிகவும் அவசியமான நலன்புரிச் செயற்பாடுகளாகிய சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்ற திட்டங்களை செயற்படுத்துவதில் அரசுகள் பின்வாங்குவதும்,(David Brown L, Sanjeev Khagram, Mark Moore H.& Peter Frumkin, 2000: 2-4) சிவில் சமூக இயக்கத் தலைவர்கள் இவ் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு முன்வருவதும் சாதாரண நிகழ்வாகிவிட்டது.

**iii.** மனித உரிமை

பலவீனமான அரசுகளின் உள்நாட்டு விடயங்களில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற பெயரில் பரிந்து பேசி வல்லரசுகள் தலையிடுகின்றன. மேலும் பலவீனமான அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு பயங்கரவாத பிரச்சினைகளை காரணங்காட்டுவதுடன், பயங்கரவாதப் பிரச்சினைகளால் பூகோளமக்களின் வாழ்க்கை, பொருளாதாரம் என்பன உலகளாவிய ரீதியில் பாதிக்கப்படுவதாக வல்லரசுகள் கூறுகின்றன. அத்துடன் எல்லை தாண்டிய பயங்கரவாதம், சுற்றுச்சூழல் மாசடைதல், அணுசக்தி பரம்பல், தொற்று நோய் பரம்பல், உள்நாட்டில் தோன்றும் இனமோதல் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டிய தேவை பூகோளமயமாக்கத்தினால் ஏற்பட்டுள்ளது (Ashish Bansal,2008:3). இவைகள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பினை வல்லரசுகள் ஏற்றுக் கொண்டு இதன்மூலம் உலகநாடுகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பொறிமுறையினை உருவாக்கியுள்ளன.

**iv.** எல்லை கடந்த அரசு

பூகோளமயமாதல் எல்லை கடந்த அரசுகளை எல்லை கடந்த பிரஜாவுரிமையுடன் உருவாக்கியுள்ளது. உலகத்தின் ஒரு பகுதியிலிருந்து பிறிதொரு பகுதிக்குச் சென்று அங்கு அந்நாட்டுப் பிரஜைகளாக குடியேறினர். இதன் மூலம் பல் - கலாசார பிரஜாவுரிமை எழுச்சியடைந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் உள்ள பிரஜைகள் ஐரோப்பிய நாடுகளுள் நிரந்தரமாக குடியேற முடிந்தது.

மேற்கு ஐரோப்பிய அரசுகளாகிய இத்தாலி, பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பேர்க் ஆகிய ஆறு அரசுகள் இணைந்து ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தினை உருவாக்கின. இது பின்னர் ஐரோப்பிய சமுதாயமாக மாற்றமடைந்து, 1992 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியமாக மாற்றமடைந்தது. ஐரோப்பிய யூனியனின் எதிர்காலக் கனவு "பொதுவான ஐரோப்பிய இல்லம்" (Common European Home) என்பதை அடைவதாகும். ஐரோப்பிய யூனியனில் அங்கம் பெறும் நாடுகள் அனைத்தும் பொதுவான நாணயத்தை பயன்படுத்துவதுடன் (Euro) பொதுவான வெளிவிவகாரக் கொள்கை, பாதுகாப்புக் கொள்கைகளைப் பயன்படுத்துகின்றார்கள். ஐரோப்பிய யூனியனின் நிர்வாகத்திற்கு ஐரோப்பிய ஆணைக்குழு பொறுப்பானதாகும். இதன் தீர்மானத்திற்கு எல்லா அங்கத்துவ நாடுகளும் கட்டுப்படுகின்றன. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் தோன்றும் சட்டத்திற்குட்பட்ட தகராறுகளை ஐரோப்பிய நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றது. இதன் தீர்ப்பினை அங்கத்துவ நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன. அங்கத்துவ நாடுகளின் பிரசைகள் சுதந்திரமாக பரஸ்பரம் ஒவ்வொரு நாடுகளுக்குள்ளும் பிரயாணம் செய்கின்றார்கள். இணைந்த கல்வி நிறுவனங்கள் வியாபாரம், தொழில் வாய்ப்புக்களை எவ்வித ஒளிவு மறைவுமின்றி அங்கத்துவ நாடுகள் மேற்கொள்கின்றன.

இந்நிலையில் ஐரோப்பிய யூனியனில் வாழும் மக்கள் ஒன்றிணைக்கப்பட்ட இறைமை (Pooled Sovereignty) மூலம் பின்வருமாறு நன்மைகளை அனுபவிப்பதை அவதானிக்கலாம்.

1. ஐரோப்பிய யூனியனில் அங்கத்துவம் பெறும் அரசுகளில் உள்ள மக்கள் எல்லை கடந்து சென்று வாழவும் பயனுள்ள தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும், சுதந்திரமாக பிரயாணம் செய்யவும் உரிமை பெறுகின்றார்கள்.
2. அங்கத்துவ நாடுகளில் வாழும் மக்கள் தொழில் வாய்ப்பினைப் பெறும் சந்தர்ப்பத்தில் தேசியத்தினைக் காரணமாகக் கொண்டு பாரபட்சப்படுத்தப்படுதலை ஐரோப்பிய யூனியனின் சட்டம் தடை செய்கின்றது. சமூகப் பாதுகாப்பு, தொழிற் சங்க உரிமைகள், கல்வி, தொழிற் பயிற்சி, சிறப்பான வாழ்க்கை, தொழில் சூழலைப் பெறுதல் போன்றவற்றில் பாரபட்சப்படுத்தப்படுதலுக்கு உட்படுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.
3. அங்கத்துவ நாடுகளிடையே பொதுவான கல்வி முறையினூடாக பரஸ்பர மொழி கலாசாரம் பற்றி தெரிந்து கொள்வதற்கும், கற்றுக் கொள்வதற்கும் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.
4. அங்கத்துவ நாடுகளின் பிரசைகள் முழுமையான பிரஜாவுரிமையினைப் பெற்றுக் கொள்வதற்கான அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள ஐரோப்பிய யூனியன் சிபாரிசு செய்கின்றது.
5. அரசுகள் தமது பிரதேசத்திற்குள் முழுமையான அதிகாரத்தினை இழந்திருக்கும். அங்கத்துவ அரசுகளின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஒவ்வொரு விடயத்திலும் சங்கிலியால் பிணைக்கப்படுகின்றான்மனிதன் சுதந்திரமாகப் பிறந்தாலும், பல்வேறு நிலைகளில் பல்வேறு விடயங்களுடன் பிணைக்கப்பட்டு, இணைக்கப்பட்டுள்ளதோடு ஏனையோரில் தங்கியும் வாழ்கின்றான். எனவே எதிர்காலத்தில் மனிதனாலும்,அரசுகளினாலும் தனித்து வாழமுடியாததுடன், எதிர்காலத்தில் அரசுகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டியதும் தவிர்க்க முடியாததாக இருக்கும் என்பது ரூசோவின் (1712-1778) வாதமாகும். இதன்மூலம் எதிர்காலத்தில் பூகோள அரசில் மக்கள் வாழவேண்டிய சூழல் உருவாகும் என்பதை ரூசோ பின்வருமாறு எதிர்வுகூறியுள்ளார். ஒருநாள் ஐரோப்பிய பொதுநலவாயம் தொடர்பாக உணருங்கள். இதுவே எப்போதும் நிலைத்திருக்கும் என்பதை உங்களால் நிச்சயப்படுத்தலாம். எல்லோரது நன்மையிலுமே பொது நன்மை காணப்படும் என்பதை அனுபவத்தினால் உணரலாம் (Vaughan C.E,1917). எனவே பூகோளமயமாதல் உலகஅரசாங்கத்தினை உருவாக்கும் நோக்கில் பூகோளத்தினை கிராமமாக்கியுள்ளது எனக் கூறுமுடியும். ஆயின், பூகோளக்கிராமம் தொடர்பான கலந்துரையாடலுக்குள் செல்வது அவசியமாகின்றது.

5. பூகோளக்கிராமம்

1724 ஆம் ஆண்டிற்கும் 1804 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இம்மானுவல் கான்ட் (Immanuel Kant) சர்வவியாபகமாக நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தை

(Universal and Lasting Peace) அடிப்படையாகக் கொண்டு மனித இனத்தின் எதிர்காலத்திற்காக யுத்தம் இல்லாத உலகத்தினை உருவாக்கவேண்டும் எனக் கூறினார். இவரின் கருத்து யதார்த்தமாக வேண்டுமாயின் உலக அரசாங்கத்தினை நிறுவவேண்டும். உலக அரசாங்கம் உருவாகுமாயின் அதுவே மிகவும் உயர்ந்த உலக நிறுவனமாக காணப்படும். இது பூகோள அரசாக மாறலாம். இது ஏனைய எல்லா அரசுகளிலும் மேலான அரசாக இருக்கும். அரசுகளுக்கு எல்லாம் அரசாக இது இருக்கும். 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஹொப்ஸ்,லொக்,ரூசோ போன்ற சிந்தனையானர்கள் அறிவுபூர்வமாக சிந்திக்கும் தனிமனிதர்கள் சுபீட்சம், பாதுகாப்பு, சமாதானத்திற்காக பொதுவிருப்பின் அடிப்படையில் சமூக ஒப்பந்தத்திற்கு முன்வந்தார்கள் எனக் கூறுகின்றனர் (Andrew Hacher, 2006: 212,278,317). இவர்களுடைய கருத்து உலக அரசாங்கத்தினை நிறுவுவதற்கு ஆதரவானதாகும். அறிவுபூர்வமாக சிந்திக்கும் தனிமனிதன் அல்லது தேசம் உலக அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தினை செய்ய விரும்பலாம்.கோல்ஸ்மித் (Goldsmith) கனவு காணும் ″மனிதர்களின் உலகப் பிரஜாவுரிமை (James Watt,2006:57)″தாகோரின் (Tagore) இலக்காகிய ″உலகளாவிய மனிதன்″(Anayet Hossain F. M,2015:82) என்பவைகளை நிதர்சனமாக்குபவைகளாக இவைகள் அமைகின்றன.

மார்ஷல் மக்லுகன்(Marshall McLuhan)மின்னனுத் தொடர்பாடல் உலகத்தினை சிறிய கிராமமாக (Small Planet) அல்லது பூகோளக்கிராமமாக (Global Village) மாற்றியமைக்கும் அல்லது உலக அரசாங்கத்தினை உருவாக்கும் என கூறியது (Barbara J. Walkosz, Tessa Jolls and Mary Ann Sund,2008: 2) போன்று, தேசிய அரச முறைமைகளில் செல்வாக்குச் செலுத்தி பூகோள அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவதை அவதானிக்கலாம். இதனால் பூகோளமயவாக்கத்தின் தேசிய அரசுகள் மீதான செல்வாக்கானது சமூகத்தில் தனியதிகாரமுடையது அரசு என்ற கோட்பாட்டினையும், இறைமை பற்றிய ஒருமைவாதக் கோட்பாட்டினையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

வின்சே,″தனியதிகாரமுள்ள அரசு என்ற பதம் அழிந்து விட்டது″ எனவும், ஏர்னஸ்ட் பார்க்கர் ″அரசின் தனியதிகாரமுள்ள கோட்பாடு போல் பயனற்றதும் வரண்டு போனதுமான கோட்பாட்டை காண முடியாது″ எனவும், லஸ்கி ″அரசிலிருந்து இறைமைக் கோட்பாட்டை நீக்கி விடுதல் சிறந்தது″ என்றும் கூறும் கருத்துக்கள் பூகோளமயமாதல் மூலம் உயிரோட்டம் பெறுகின்றது எனலாம்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி (IBRD), சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்ற பல சர்வதேச நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இந்நிறுவனங்கள் சர்வதேச அரசியலில் இன்றுவரை ஆதிக்கம் செலுத்தி வருவதை அவதானிக்கலாம். சிவில் சமூகங்களின் தலையீடு, பயங்கரவாதம், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வல்லரசுகள் மேற்கொண்டுவரும் தலையீடு, நவீன தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கள், எல்லை கடந்த அரசாங்கங்களின் உருவாக்கம் என்பன உலக அரசாங்கத்தினை உருவாக்குவதறகான முகவர்களாக செயற்படுகின்றன (December Green and Laura Luehrmann, 2010:118). உலகஅரசாங்கத்தினை (World Government) உருவாக்குவதற்கான முன் நிபந்தனைகள் பூகோளமயமாதல் மூலம் உருவாக்க முயற்சிக்கப்படுகிறது.பூகோளநகரம் என்ற தத்துவத்தினடிப்படையிலான நன்னெறி விதிகள் மேன்நிலைப்படுத்தப்பட்டு வருவதுடன், இந் நன்னெறி விதிகளை எல்லா அரசுகளும் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் மார்ஷல் மக்லுகன்கூறும்பூகோளளவில் சிந்தித்து தேசியளவில் செயற்படுதல் (Think Globally, Act Nationally) என்ற பூகோள கலாசாரம் முதன்மை பெற்று வருகின்றதுடன், பூகோளமும் உள்ளூரும் இணைந்து 'Glocal'(Global + Local = Glocal) என்ற கலாசாரம் வளர்ந்து வருகிறது (Barbara J. Walkosz, Tessa Jolls and Mary Ann Sund, 2008:3-4 ). கலாசார நோக்கில் கட்டமைப்புக் கலப்புப்பண்பாதல் (Structural Hybridization) வடிவம் தோற்றம் பெறும். நடைமுறையிலிருக்கின்ற கலாசார வடிவங்களுடன் புதிய நடைமுறைகளும், வடிவங்களும் இணைந்துகொள்ளளும் விசைப்பண்பினை அவதானிக்கலாம். தேசியவாதம், நாட்டுப்பற்று (patriotism), தேசியபொருளாதாரம் பலவீனமடைதல்,அரசஅதிகாரத்தை கடந்து சர்வதேச மனித உரிமைகளின் தரத்தினை கோருதல், எல்லைகடந்த அரசமுறைமையின் வலைப்பின்னலைப் பயன்படுத்தி சிறுபான்மை மக்கள் தமது நலன்களை முன்னிலைப்படுத்தப்படும் காட்சிநிலை தோற்றம் பெறும் (Jan Nederveen Pieterse,1993:5 ).

6. முடிவுரை

அறிவுபூர்வமாக சிந்திக்கும் மனிதன் அல்லது தேசம் உலக அரசாங்கம் ஒன்றை

உருவாக்குவதற்கான ஒப்பந்தத்தினை செய்யவிரும்பலாம். ஆனால் உலகஅரசாங்கத்தை நிறுவமுயற்சிக்கும்போது சில தடைகள் ஏற்படலாம். பொருளாதார, இராணுவ பலத்தையுடைய அரசாங்கம் புதிய உலக ஒழுங்கினைப் பயன்படுத்தி அதிக நன்மைகளை பெற முயற்சிக்கலாம்.இவ்வாறு முயற்சிக்கும் அரசாங்கம் உலகஅரசாங்கம் என்ற அமைப்பினை விரும்பாதுவிடலாம். பனிப்போரின் பின்னர் தோன்றிய புதிய உலக ஒழுங்கினை பயன்படுத்தி ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை மீறி தனது நலனுக்காக செயற்பட்ட அனுபவங்களை உதராணமாகக் கொள்ளலாம்.

எனவே சமகால அரசியல் காட்சி நிலையில் பூகோளமயமாதல் சில பாதிப்பினைச் செலுத்தலாம். சர்வதேசளவில் சிறுபான்மை மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. உலகில் பெரும்பாலான ஜனநாயக நாடுகள் காணப்பட்ட போதும் உள்நாட்டில் தோன்றும் சமூக மோதல்களைத் தீர்க்க முடியாது அவைகள் திணறுகின்றன. சமூக மோதல்களைத் தீர்ப்பதற்கு ஜனநாயக நாடுகள் தமது நாட்டு மக்களுக்கு எதிராக பலத்தை அல்லது துப்பாக்கியை பயன்படுத்துவதை அவதானிக்கலாம். எனவே இருபத்தியொராம் நூற்றாண்டில் நிகழும் சமூகமோதல்களால் பூகோளமயமாதல் தோற்கடிக்கப்படலாம். பூகோளமயமாதல் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் உள்நாட்டு மோதல்கள் சமாதான வழிமுறைகளுடாக தீர்க்கப்பட வேண்டும். இதனைச் செய்வதற்கு அரசுகள் தவறுமாயின் ஒவ்வொரு அரசிற்குள்ளும் பலவகையான குறுகிய தேசியவாத உணர்வுகள் உருவாகலாம். இவைகள் அடையாள அரசியலை கூர்மைப்படுத்தி எழுச்சியடையலாம். பூகோளமயமாதல் மக்களின் மரபுரீதியான வாழ்க்கை, தேசிய உறவு போன்றவற்றை பலவீனமாக்கியுள்ளது. இதனால் சமயம், இனத்துவம், மொழி, பிரதேசம் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட குழுவாததேசியவாதம் உருவாகலாம். இவ்வாறான அனுபவம் யூகோஸ்லேவேக்கியா,ரூவெண்டா,சிரியா,எகிப்து,பர்மா,இலங்கை போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ளது. எனவே பூகோளமயமாதல் தேசியவாதத்தினையும் தேசியவாதம் பூகோளமயமாதலையும் தீர்மானிக்கும் சூழல் உருவாகலாம்.

அதேநேரம் உலகமக்கள் பூகோளமயமாக்கலுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். 2001ஆம் ஆண்டு ஆடி மாதம் இத்தாலியின் ஜெனிவா நகரில் நடைபெற்ற G8 உச்சி மகாநாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து மூன்று இலட்சம் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். சீனநாகரிகமும், இஸ்லாமிய சமயமும் எதிர் நீச்சல் போட்டு தமது பாதுகாப்புடன் பூகோளமயவாக்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கி வருகின்றன. மேலும் மேற்குலகின் ஏற்பட்ட நிதிநெருக்கடி கீழைத்தேசத்தை அதிகாரநோக்கில் கையாள முடியாமல் தடுத்து விட்டாலும், உலகநாடுகளுக்கிடையிலும், மக்களுக்கிடையிலுமான தொடர்பினை ஏற்படுத்துதல், சந்தைகளின் விரிவாக்கம் போன்றவற்றனூடாக முதலாளித்துவ நாடுகள் மூன்றாம் மண்டல நாடுகளில் தலையிடுகின்றன. எனவே பூகோளமயமாக்கம் ஏற்படுத்தியுள்ள பாதகமான விளைவுகளால் அதற்கு எதிராக உலக மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தினாலும் மேற்குலகில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகள் பூகோளமயமாக்கச் செயற்பாட்டினை கட்டுப்படுத்தி வருவதை அவதானிக்கலாம்.

எனவே காலத்தினாலும், இடத்தினாலும் தெளிவற்று, சுருங்கிப் போயிருக்கும் பழைய அரசியல் நிறுவனங்கள் மாற்றப்பட வேண்டிய தேவையுள்ளது. பூகோளக்கிராமம் நோக்கிய விசைப்பண்பிற்கு ஏற்ப அரசு, இறைமை, அரசாங்கம், சட்டம், அபிவிருத்தி, மக்கள் பங்கு பற்றுதல், அரசியல் ஆட்சேர்ப்பு, புரட்சி, பிரஜாவுரிமை போன்ற எண்ணக்கருக்கள் மீளமைக்கப்பட அல்லது மீள் வியாக்கியானப்படுத்த வேண்டிய தேவைகள் மாத்திரமே உருவாகியுள்ளன. இதன்மூலம் வீரியம் குறைவடைந்து குறைந்தபட்ச பணிகளை தேசிய அரசுகள் சமூகத்தில் மேற்கொண்டாலும், தேசிய அரசுகளின் வடிவம் பூகோளமயவாக்க தொழிற்பாட்டினால் மீள் ஒழுங்கிற்கு உள்ளாகப் போவதில்லை. கொள்கைகள், வழிநடத்தல்களைக் கொண்டிருக்கும் நிறுவனமாக அரசு தொடர்ந்தும் சமூகத்தில் நிலைத்திருக்கும் என நம்பலாம்.

## REFERENCE


1. Ali Farazmand and Jack Pinkowski. (2007). *Handbook of Globalization, Governance and Public Administration.* New York: Taylor & Francis.
2. Anayet Hossain, F.M. (May 2015). Universal Humanism of Tagore. *Asian Journal of Social Sciences & Humanities Vol. 4(2)*, Retrieved from http://www.ajssh.leena-luna.co.jp/AJSSHPDFs/Vol.4(2)/AJSSH2015(4.2-09).pdf

3. Andrew Hacher. (2006). *Political Theory: Philosophy, Ideology, Science.* Delhi: Surjeet Publications,

4. Anthony Giddens. (1990).*The Consequences of Modernity*. Cambridge: Polity Press.

5. Ashish Bansal. *Globalization and Human Rights: Help or Hindrance.* Retrieved from http://gedi.objectis.net/eventos-1/ilsabrasil2008/artigos/dheh/bansal.pdf

6. Barbara J. Walkosz, Tessa Jolls and Mary Ann Sund. (14-16 May 2008). *Global/Local: Media Literacy for the Global Village.* Paper Submitted for International Media Literacy Research Forum Inaugural Meeting Ofcom London. Retrieved from http://www.medialit.org/sites/default/files/33_globallocal.pdf

7. Daði Arnar Sigmarsson. (2008). *Globalization vs. State Sovereignty: Constitutional Rights in a Crisis?* Retrieved from http://skemman.is/stream/get/1946/1617/5238/1/Globalization_vs._State_Sovereignty_Constitutional_Rights_in_a_Crisis.pdf

8. David Brown L., Sanjeev Khagram, Mark Moore H. & Peter Frumkin. (2000). Globalization, NGOs and Multi-Sectoral Relations. The Hauser Center for Nonprofit Organizations and The Kennedy School of Government Harvard University, *Working Paper No.1,* Retrieved from URL,http://citeseerx.ist.psu.edu/viewdoc/download?doi=10.1.1.199.9912&rep=rep1&type=pdf

9. December Green and Laura Luehrmann. (2010). *Comparative Politics of the Third World: Linking Concepts and Cases*. New Delhi: Viva Books.

10. Deepak Nayyar. (1999). Globalization: The Past in our Present in Debendra Kumar Das (Ed.) ***Globalization and Development: Experience and Challenges***. New York: Deep & Deep Publication.

11. Dumitrescu Luigi and Vinerean Simona. *The Glocal Strategy of Global Brands.*Studies in Business and Economics. Retrieved from http://eccsf.ulbsibiu.ro/RePEc/blg/journl/538dumitrescu%26vinerean.pdf

12. James Watt. (2006). *Goldsmith's Cosmopolitanism.* Retrieved from http://eprints.whiterose.ac.uk/1754/1/wattj1.pdf

13. Jan Nederveen Pieterse. (1993). *Globalization as Hybridization***.** Retrieved from http://www.researchgate.net/profile/Jan_Nederveen_Pieterse/publication/249738872_GLOBALISATION_AS_HYBRIDISATION/links/54e112720cf2953c22b9a943.pdf

14. Group of Experts on the United Nations Programme in Public Administration and Finance, Fifteenth session. (8-12 May 2000).*Globalization and State: an overview***.** Retrieved from http://unpan1.un.org/intradoc/groups/public/documents/un/unpan000569.pdf

15. Kelly Gordon. (2008). *The Origins of Westphalian Sovereignty*. History Department ,Western Oregon University, Retrievd from https://www.wou.edu/las/socsci/history/senior_seminar_papers/2008/thesis%2008/Kelly%20Gordon.pdf

16. Khi V. Thai, Dianne Rahm and Jerrell D. Coggburn. (2007). *Handbook ofGlobalization and the Environment.* New York: CRC Press.

17. Leonid E. Grinin . *State Sovereignty in the Age of Globalization: Will it Survive?*. Retrieved from http://www.sociostudies.org/books/files/globalistics_and_globalization_studies/211-237.pdf

18. Mark Blacksell. (2006). *Political Geography*. New York: Routledge.

19. Nilüfer Karacasulu Göksel, *Globalisation and the State***.** Retrieved from http://www.sam.gov.tr/perceptions/Volume9/March-May2004/1NilüferKaracasulu.pdf

20. Roland Robertson. (1992).*Globalization: Social Theory and Global Culture.* London :Sage.

21. Thomas Friedman. (1999). *The Lexus and the Olive Tree.* New York: Farrar, Straus and Giroux.

22. Vaughan C.E, (Translater & Editor). (1917). *Political Writing of Rousseau*. Jean-Jacques Rousseau A Lasting Peace through the Federation of Europe and The State of War. London: Constable and Co. Retrieved from http://oll.libertyfund.org/titles/1010